**செ.வெ.எண்: 47/2020** **நாள்: 25.01.2021**

**விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்.,இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது:**

விருதுநகர் மாவட்டத்தில் சமூக பாதுகாப்புத்துறையின்கீழ் இயங்கும் மல்லிபுதூர் சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம் (ஆண்கள்) மற்றும் அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லம் (பெண்கள்) ஆகிய இல்லங்களில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதியம் அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலை பட்டம் பெற்ற நபர்கள் அவர்களது விண்ணப்பங்களை உரிய கல்விச்சான்றுகளின் ஒளிநகலுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் தேர்வுக்குழு மூலம் நேர்முக தேர்வு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

மேற்குரிய இரண்டு குழந்தைகள் இல்லத்திற்கும் தனித்தனியாக 3 பணியிடங்கள் வீதம் மொத்தம் 6 நபர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். தேர்வு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் ஐந்து மாதத்தில் 70 நாட்களுக்கு (ஒரு ஆற்றுப்படுத்துநர் 24 வருகைக்கு மிகாமல்) மதிப்பூதியம் அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000/- மட்டும் வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்களை அதிகாரப்பூர்வ இணைய தளமான www.virudhunagar.nic.in லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய கல்வி சான்றுகளின் ஒளிநகலுடன் தனித்தனியாக பின்கண்ட குழந்தைகள் இல்ல முகவரிக்கு நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ 06.02.2021 மாலை 5.30 மணிக்குள் சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்கள் தகவலின்றி நிராகரிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்.,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

1. கண்காணிப்பாளர்
   சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம்
   மல்லிபுதூர் - 626141
   திருவில்லிபுத்தூர் -(வ),
   விருதுநகர் மாவட்டம்
   தொலைபேசி எண்.04563 281539.

2. கண்காணிப்பாளர்
   அன்னை சத்யா அரசு குழந்தைகள் இல்லம்
   தாதம்பட்டி ரோடு, சூலக்கரை,
   விருதுநகர் - 626003.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**

# FORMAT

Application From for the post of: ____________________

Pass-port size photograph of the applicant to be affixed

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Applicant | : | |
| 2. | Name of the Father / Husband | : | |
| 3. | Date of Birth | : | |
| 4. | Age as on 31.12.2020 | : | |
| 5. | Gender | : | |
| 6. | Native District | : | |
| 7. | Marital Status | : | |
| 8. | Address for Communication | : | |
| 9. | Phone Number | : | |
| 10. | Educational Qualification | : | |
| 11. | Additional Qualification | : | |
| 12. | Religion and Community | : | |
| 13. | Details of working Experience | : | |
| 14. | If physically disabled mention the disability | : | |
| 15. | In case of widow/divorce/deserted wife/destitute/ex-student of home (please mention the category) | : | |
| 16. | Criminal Case Registered (If Yes, Please) | : | |

**Signature of the Applicant.**

CS Scanned with CamScanner